[16th December 1959

Bonus to State Transport Workers, Kanyakumari District

* 225 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri T. S. RAMASWAMY) : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the workers of the State Transport Depot of Kanyakumari District, who are in receipt of bonus before the Reorganisation of the States, are being paid that bonus now?

The Hon. Sri V. RAMAIAH : No, Sir.

Higher Technological Institute

* 225-A *Q.*—Sri R. SUBRAMANIAM (on behalf of Sri K. VINAYAKAM) : Will the Hon. Minister for Finance be pleased to state—

(*a*) in what place would the Higher Technological Institute be started in the State and when;

(*b*) how many students would be admitted to start with and on what basis;

(*c*) what are the courses that would be taught in this Institute; and

(*d*) who will finance this Institute?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) *to* (*d*) A statement* is laid on the table of the House.

Hindi Inscriptions on milestones

* 225-B *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to State whether it is a fact that Hindi is written on milestones in North Arcot district?

The Hon. Sri P. KAKKAN : Yes, Sir. The milestone on National Highways in North Arcot district contain inscriptions in English, Tamil and Hindi.

Sri K. ANBAZHAGAN : *மைல் கற்களிலே இந்தி எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பதை தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் யாரும் விரும்பவில்லை, அது தேவைப்படாதது என்பதை இந்த அரசாங்கம் வலியுறுத்தி தெரிவித்திருக்கிறதா? இந்தி எழுதப்பட்டிருப்பதை விரும்பாத பொது மக்கள் பல இடங்களில் அதை தார் கொண்டு அழித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?*

The Hon. Sri P. KAKKAN : *தேசீய பெருவழி சாலைகளிலே மட்டும் இப்பொழுதுதான் முதலில் ஆங்கிலம், பிற்பாடு தமிழ், கடைசியாகத்தான் இந்தி எழுதப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு சில இடங்களில் கனம் அங்கத்தினர் சொல்லியபடி இந்தியை அழித்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் தங்களுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தி ஒரு முக்கியமான தேசிய மொழியாக இருப்பதினால்*

---

* Printed as Appendix III on page 409 infra.

16th December 1959]

அதையும் மக்கள் தெரிந்துக்கொள்ளவேண்டிய காரணத்தினால், அது கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய முதன் மந்திரி அவர்கள், பிரைம் மினிஸ்டர் அவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுதவேண்டும், இல்லாவிட்டால் ஆங்கிலத்தில் மட்டுமாவது எழுதவேண்டும் என்று அவர்கள் எழுதிய கடிதத்திற்கு பதில் கொடுத்திருக்கிறார்கள். அதன்பேரில் இப்பொழுது பரிசீலனை செய்து எல்லா இடங்களிலும் இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு பதில் சொல்லுவதற்கு ஒரு குட்டிக் கதை மட்டும் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு குருடன் லாந்தலை கையில் எடுத்துக்கொண்டு போனான். கண் தெரியாதவனுக்கு எதற்கு லாந்தல் என்று அதைப் பார்த்து பக்கத்தில் இருந்தவர்கள் சிரித்தார்களாம். லாந்தல் மற்றவர்களுக்காக. ஆகையினால் இந்தி எழுதியது. . .

SRI M. KARUNANITHI : தமிழர்களெல்லாம் குருடர்கள் என்று சொல்லுகிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இம்மாதிரி தவறான பிரசாரம். . . .

ஸ்ரீ மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஸ்ரீ க. அன்பழகன், மற்றும் சில கனம் அங்கத்தினர்கள் எழுந்தார்கள். (குரல்கள்—பாயின்டு ஆப் ஆர்டர், ஸார்).

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முடித்ததற்கு பிற்பாடு பாயிண்டு ஆப் ஆர்டர் கிளப்பலாம்.

MR. SPEAKER : I do not know what the answer is. After the Hon. Minister finishes his answer, I will give the Hon. Members a chance to raise the point of order

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆகையால் இந்தி எழுதியிருக்கிறது என்றால், இந்தி தெரியாதவர்களுக்காக அல்ல. நம்மைப் பொருத்த வரையில் இந்தியில் எழுதியிருப்பது நமக்கு எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. அங்கு இந்தியில் எழுதியிருப்பது நமக்காக அல்ல. வெளியிலிருந்து இந்தி மட்டும் தெரிந்தவர்கள் இங்கே வருகிறார்கள். அவர்கள் தெரிந்துகொள்ளுவதற்காகத்தான் இந்தியில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தியைப் பார்த்து தெரிந்துக்கொள்ளுவதற்கு நமக்கு அவசியமில்லை. ஆனால் இந்தி மட்டும் தெரிந்தவர்களுக்கு அது அவசியம். மற்ற இடங்களிலிருந்து நம்முடைய தமிழ் நாட்டிற்கு மக்கள் வந்து இங்கு இருக்கக்கூடிய இடங்களை பார்க்கவேண்டும், இங்கு அவர்கள் அதற்காக செலவழிக்கவேண்டும், அதன் மூலம் நம்முடைய பொருளாதாரம் உயரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்த எண்ணத்தோடுதான் நான் சொன்னேனே தவிர, தமிழர்கள் குருடர்கள் என்று சொல்லவில்லை. இந்தி நமக்கு அவசியம் இல்லை. அதைப் புரிந்துகொள்ளுவதற்கு நமக்கு அவசியம் கிடையாது. இந்தியைப் பொருத்தவரையில், மற்ற இடங்களிலிருந்து இந்தி

[16th December 1959

மட்டும் தெரிந்தவர்கள் இங்கு வரவேண்டும், அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தியிலும் எழுதப்பட்டிருக்கிறது.

Mr. SPEAKER : What is the point of order. There can be none.

Sri C. N. ANNADURAI : I want a clarification from the Hon. the Finance Minist r இந்தி தெரிந்தவர்களுடைய உபயோகத்திற்காக இந்தி எழுதப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வடக்கே இருக்கிற பெரிய சாலைகளில் இங்கிருந்து போகிறவர்கள் அறிந்துகொள்ளுவதற்காக, அங்கு மைல் கல்லில் தமிழ் மொழியிலோ அல்லது திராவிட மொழியிலோ எங்காகிலும் எழுதப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : வடக்கேயிருந்து இங்கு வரக்கூடியவர்களில் அநேகமாக எல்லோருக்கும் இந்தி தெரியும். ஆனால் இங்கிருந்து போகிறவர்களுக்கு உபயோகமாக இருக்க வேண்டுமென்றால் வடக்கே தமிழில் மட்டும் எழுதினால் போதாது. ஒரு பெரிய போர்டில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி போன்ற எல்லா மொழிகளிலும் எழுத வேண்டியிருக்கும். ஆகையினால், நமக்கு எது நல்லது என்பதை நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது. இன்றைக்கு வடக்கே இருப்பவர்கள் நம் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து நம்முடைய ஸ்தலங்களுக்கு வந்து அங்கு அவர்கள் பணத்தை செலவழிக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோமா என்பதைத்தான் கவனிக்கவேண்டும். அவர்கள் நம்மை விரும்புகிறார்களா, இல்லையா என்பது வேறு விஷயம். நம்முடைய பொருளாதாரம் உயர்வதற்கு இங்கு அவர்கள் வரவேண்டும், நம்முடைய நன்மைக்காக அவர்கள் இங்கு வரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். நம்முடைய நன்மையை நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்களுக்கே விட்டுவிடுவோம். . . .

Sri C. N. ANNADURAI : அமைச்சர் அவர்கள் சொல்லுகிற மாதிரி ஒரு பெரிய போர்டு போட்டு எல்லா மொழிகளிலும் எழுத வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. எல்லோருக்கும் பொதுவாக ஆங்கில மொழி இருக்கிறது என்ற கருத்திலே ஆங்கிலத்திலாவது எழுதியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆங்கிலத்தில் போட வேண்டும் என்றுதான் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

Sri C. N. ANNADURAI : ஆங்கிலத்தில் இல்லை என்பதுதான் என் குறை.

Sri A. A. RASHEED : May I know why North Arcot was chosen for writing Hindi on milestone?

The Hon. Sri C. SUBRAMANIAM : It is not in North Arcot alone but in all National Highways.

16th December 1959]

Mr. SPEAKER : I want to impress on hon. Members that if they want to raise a point of order, they must wait till the hon. Member on whose speech they want to raise the point of order finished his speech. Then only the Chair can know what exactly the point is on which they want to raise the point of order. Just now I saw a very, very unfortunate spectacle of the hon. Members, Sri Karunanithi and Asai Thambi thumping the table and raising a point of order on a point of which I am not aware. So I would request hon. Members who want to raise a point of order to wait till the hon. Member on whose speech they want to raise the point of order, finishes his speech.

Sri K. ANBAZHAGAN : சென்னை மாநில. . . .

Sri J. MATHA GOWDER : If we do the same thing to them . . .

Mr. SPEAKER : If the hon. Member does the same thing I will say the same thing to him also.

Sri K. ANBAZHAGAN : சென்னை மாநில அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, மத்திய சர்க்காருக்கு தெரிவித்த கருத்தின் படி வட்டார மொழியோடு ஆங்கிலத்தைமட்டுமே எழுத வேண்டும் என்று வேண்டிக்கொள்ளும்போது, சென்னையிலே ஹிந்தியை எழுதச்செய்ய வேண்டாம் என்று சொல்ல அரசாங்கம் முன் வருமா.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஹிந்தியும் பொது மொழி என்பதை சட்டத்திலேயே போட்டு இருக்கிறோம். இப் போதைக்கு ஹிந்தி எவ்வளவு அவசியம் என்று பார்க்க வேண்டும். இங்கு வரும் வடநாட்டார்களுக்கு சௌகரியம் செய்ய வேண்டும் என்று செயல் படுகிறோம். நமக்கு ஒன்றும் அவசியமென்றல்ல.

Sri M. KALYANASUNDARAM : வடக்கே நெடுஞ்சாலைகளில் உள்ள கற்களில் தெற்கு மொழியில், 10 மைலுக்கு ஒரு கல்லி லாவது, தென் மொழி போட யோசனை கூறுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அப்புறம், மாரி, மாரி ஒவ்வொன்றாக வரும். ஒரு பக்கத்தில், திரும்ப வேண்டிய அவசியம் இருக்கிறது ; அப்பொழுது ஒவ்வொரு திருப்பத்திலும் ஒருதரம் அம்மாதிரி எழுதவேண்டியிருக்கும். அப்பொழுது அது கஷ்டமாக இருக்கும். இந்த விஷயத்தில் மொழியில் விருப்பு, வெறுப்பின்றி, எது அவசியம், எது நியாயம் என்று பார்க்க வேண்டும். இன்னொருவர் தவறு செய்தார் என்று நாமும் அதைச் செய்ய வேண்டாம். இங்கு சரியாகச் செய்ய வேண்டும் என்பது தான் நமக்கு முக்கியம். இந்த சர்க்கார் செய்திருப்பதை மற்ற இடங்களிலே செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். அவர் களுடைய நன்மைக்காக அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

Sri A. V. P. ASAITHAMBI : வட நாட்டு மைல் கல்களிலே ஆங்கிலத்திலும் போடுவார்கள் என்று அமைச்சரவர்கள் சொன் னார்கள். தமிழ் நாட்டைப் பொருத்த வரையில், மைல் கல்களிலே, முதலில் ஆங்கிலத்திலும், கடைசியில் தமிழிலும் இருப்பதை மாற்றி, தமிழுக்கு முதல் இடம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

[16th December 1959

THE HON. SRI C. SUBRAMANIAM : சிலர் தமிழ் என்று சொல்லும்போது, அதற்கு இதிலெல்லாம் முதல் இடம் கொடுத்தால் தான் தமிழ் பற்று என்று நினைக்கிறார்கள். என்னுடைய கருத்தில், நம் பள்ளிகளிலே, படிக்கும் பாடங்களிலே, தமிழுக்கு முதல் இடம் கொடுத்தால், தமிழுக்கு முதல் இடம் கொடுத்ததாகும். முதலில் எழுதினால் மட்டும் தமிழ் வளர்ச்சியடைந்ததாக ஆகாது.

SRI V. SANKARAN : தமிழ் எழுத்தில் எழுதியதை, ஹிந்தி எழுத்தை அழித்து எழுதப்பட்டதா, அல்லது அப்படி அழிக்காமல் எழுதப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றையும் சேர்த்து எழுதியிருக்கிறது.

UNSTARRED QUESTIONS.

Harijan Colonies for North Arcot District,

1. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் ஹரிஜன நிலக் காலனி அமைக்கக் கோரி 16–4–1959-ல் ச. மொ. அண்ணாமலை, எம். எல் ஏ-யிடமிருந்து கடிதம் வந்ததா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

Polur-Veralur Road

2. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் போளூரிலிருந்து வீரளூர் போகும் ரோட்டை தார் ரோடாக மாற்றும் திட்டம் உண்டா ?

A.—The answer is in the negative.

American aid for Government hospitals

3. *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திலுள்ள ஆஸ்பத்திரிகள், ஆரம்ப சுகாதார விடுதிகள் அமெரிக்காவிலிருந்து (UNICEF) உதவி பெறுகின்றனவா ?

(ஆ) அவைகள் யாவை ?

(இ) எவ்வளவு ரூபாய் ?

A.—(*a*) Yes, Sir.

(*b*) *and* (*c*) For Primary Health Centres—

113	sets of equipment, drugs and PHN kits for the main centres.	Value. $293,002.
339	sets sub-centre equipment	
452	sets of midwifery kits	
85	motor vehicles	
113	bicycles	